## நகர்மன்ற சாதாரண கூட்டப்பொருள்

2018ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28.02.2018ம் தேதி புதன்கிழமை மாலை 3.00 மணியளவில் கூத்தாநல்லூர் நகராட்சி அலுவலகத்தில் நடைபெறவுள்ள சாதாரணக் கூட்டத்தில் கீழ்கண்ட பொருள்கள் பரிசீலனைக்கு வைக்கப்படுகிறது.

**பொருள் எண் 1**

நகராட்சி ஆணையர் அவர்களது ஜனவரி 2018 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- பதிவு செய்யலாம் (ந.க.எண். 2105/2011/சி1)

**நகர் மன்ற தீர்மானம் எண் :- 249** **நாள் 28.02.2018**

**அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண் 2**

நகராட்சி பொறியாளர் அவர்களது ஜனவரி 2018 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது

அலுவலக குறிப்பு :- பதிவு செய்யலாம் (ந.க.எண். 2105/2011/சி1)

**நகர் மன்ற தீர்மானம் எண் :- 250** **நாள் 28.02.2018**

**அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண் 3**

நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் 13.02.2018ம் தேதிய ந.க.எண்.30322/2011–இ2 கடிதத்தின்படி நகராட்சி நிர்வாக ஆணையரக புதிதாக கட்டிடம் கட்டும் பணிக்கு கூத்தாநல்லூர் நகராட்சிக்கு பங்களிப்பு தொகையான ரூ.2,60,000/–த்தை வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே இந்நகராட்சியிலிருந்து பங்களிப்பு தொகை ரூ.2,60,000/–த்தை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :-

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. உடனடியாக பங்களிப்பு தொகை ரூ. 2,60,000/– செலுத்த வேண்டியிருப்பதால் நகர்மன்ற தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**நகர் மன்ற தீர்மானம் எண் :- 251** **நாள் 28.02.2018**

**அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண் 4**

இந்நகராட்சியின் பொதுப்பிரிவில் இயங்கிவரும் TN 50 U 2453 ஈப்பு வாகனம் 24021 கிலோ மீட்டர் ஓடிய நிலையில் மேற்படி வாகனத்தில் கீழ்கண்டவாறு பழுதுகள் நீக்கம் செய்யப்பட வேண்டியுள்ளது.

1. ஆயில் சர்வீஸ்
2. நான்கு வீல் கிரீஸ் பேக்கிங்
3. நான்கு வீல் பேரிங் செக்கப்
4. கிளட்ச் பிளேட் புதிதாக மாற்றுதல்
5. கியர் பாக்ஸ் ஆயில் கிரேன் பாக்கல் ஆயில்

மேற்படி பழுதுகள் மற்றும் இதர பழுதுகள் மஹேந்திரா நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற நிறுவனமான திருச்சி சிவா ஆட்டோமொபைல்ஸ் நிறுவனத்தில் பழுதுகள் நீக்கம் செய்யவும் அதற்கான உத்தேச செலவீனம் ரூ. 70,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :-

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. அலுவலக பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்ற தனி அலுவலர் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண். 180/2018/இ1)

**நகர் மன்ற தீர்மானம் எண் :- 252** நாள் 28.02.2018

**அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண் 5

இந்நகராட்சிக்குட்பட்ட அலுவலக பின்புறமுள்ள குடிநீர் நீர்த்தேக்க தொட்டிக்கு செல்லும் 5 எண்ணிக்கை போர்வெல் மற்றும் மோட்டாரில் 1 எண்ணிக்கை போர்வெல் மற்றும் 7.5 HP மோட்டார் பழுதடைந்துள்ளது. அதனால் குடிநீர் ஏற்றுவதில் சிரமம் ஏற்படுவதால் அதனை உடனே சீர் செய்ய ஆகும் தொகை ரூ.18,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :-

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. குடிநீர் நிதியில் மேற்கொள்ளலாம்.

**நகர் மன்ற தீர்மானம் எண் :- 253**

**அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது** **நாள் 28.02.2018**

பொருள் எண் 6

இந்நகராட்சிக்கு உட்பட்ட அலுவலக பின்புறமுள்ள குடிநீர் நீர் தேக்க தொட்டியின் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள 12.5 HP Centrifical மோட்டார் பழுதடைந்துள்ளது. அதனை சீர் செய்யவும் Stand by-யாக உள்ள மோட்டாரினை தற்பொழுது இயக்கிவருவதால் அவசர அவசியம் கருதி மோட்டாரினை சீர் செய்ய ஆகும் உத்தேச தொகை ரூ. 23,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :-

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. குடிநீர் நிதியில் மேற்கொள்ளலாம்.

(ந.க.எண். 3525/2017/இ1)

**நகர் மன்ற தீர்மானம் எண் :- 254**

**அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது** **நாள் 28.02.2018**

பொருள் எண் 7

இந்நகராட்சிக்கு உட்பட்ட அலுவலக பின்புறமுள்ள நீர்தேக்க தொட்டிக்கு செல்லும் மின் மோட்டார்களின் On/Off Control Box & Relay Point தொடர்ந்து அடிக்கடி பழுதாகி வருவதாலும் அதனை தற்காலிகமாக சரி செய்து இயக்குவதாலும் பழுதுகள் தொடர்ந்து ஏற்படுவதால் அதனை புதிதாக மாற்றிட ஆகும் உத்தேச தொகை ரூ.25,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :-

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. குடிநீர் நிதியில் மேற்கொள்ளலாம்.

(ந.க.எண். 3526/2017/இ1)

**நகர் மன்ற தீர்மானம் எண் :- 255**

**அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது** **நாள் 28.02.2018**

பொருள் எண் 8

இந்நகராட்சிக்குட்பட்ட 24 வார்டுகளிலும் புதிய குடிநீர் இணைப்பு பணி மேற்கொள்வதற்கு ஒப்பந்ததாரராக பதிவு செய்ய திரு.கு.சுதாகரன் என்பவர் மனு செய்துள்ளார். மேலும் டிப்ளமோ சிவில் இன்ஜினியரிங் கோர்ஸ், வலிவலம் தேசிகர் பாலிடெக்னிக் நாகப்பட்டிணம் என்ற சான்று இணைத்துள்ளார். எனவே மேற்கண்ட மனுதாரரை புதிய குடிநீர் இணைப்பு வழங்குவதற்கு பிளம்பராக பதிவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :-

1. பிளம்பராக பதிவு செய்யலாம்.

**நகர் மன்ற தீர்மானம் எண் :- 256**

**அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது** **நாள் 28.02.2018**

பொருள் எண் 9

இந்நகராட்சியில் இயங்கி வரும் குடிநீர் விநியோக அமைப்பினை Zonation Map மூலம் Zone-1 மற்றும் Zone -2 ஆக பிரிக்கப்பட்டு அப்பகுதியில் உள்ள மக்கள் தொகையினை கணக்கிட்டு 90 LPCD-யாக மாற்றி (Zone Population, Zone house hold, Zone HSC, Zone Ward Covered) தினசரி சராசரியாக கிடைத்திட Auto Cad மூலம் A2,A1, A0 Size வரைபடம் மூலம் மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அலுவலகத்தில் சமர்பித்திட அறிவுத்தப்பட்டதால் அனைத்து Size-களிலும் எடுக்கப்பட்டு, CD Copy, மற்றும் Tail End Walir Pessure புகைப்படத்துடன் சமர்பிக்கப்பட்டது. அதற்கான தொகை ரூ.9950./ திரு.டி.ஆர்.செந்தில்குமரன் இளநிலைபொறியாளர் அவர்களால் செலவு செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகையினை அன்னாருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. குடிநீர் நிதியில் மேற்கொள்ளலாம்.

**நகர் மன்ற தீர்மானம் எண் :- 257** நாள் 28.02.2018

**அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண் 10

இந்நகராட்சிக்கு உட்பட்ட தோட்டச்சேரி குடிநீர் தோட்டியில் இயங்கி வரும் மின் மோட்டார் 1.5 HP Submersible 05.12.2017ல் பழுதாகிவிட்டது. அதனை சரி செய்ய மோட்டாரினை வெளியில் எடுத்து சரி பார்க்கப்பட்டதில் மோட்டார் ரீவைன்டிங், மோட்டார் புஸ், மோட்டார் இம்பெல்லர் மற்றும் இதர செலவீனம் மேற்கொள்ள ஆகும் தொகை ரூ.16,500/.க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :-

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. குடிநீர் நிதியில் மேற்கொள்ளலாம்.

**நகர் மன்ற தீர்மானம் எண் :- 258** நாள் 28.02.2018

**அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண் 11

இந்நகராட்சிக்குட்பட்ட மேல்கொண்டாழி நீர்தேக்க தொட்டிக்கு 8" போர்வெல் அனுமதிக்கப்பட்டு Standby- யாக உள்ளது. தற்பொழுது கோடையினை கருத்தில் கொண்டு அந்த போர்வெல்லில் இருப்பில் உள்ள 20 HP Submersible மோட்டார் அமைத்து OHT க்கு புதிதாக நேரடியாக GI பைப் மூலம் பம்பிங் லைன் அமைத்திட ஆகும் மதிப்பிடு தொகை ரூ. 1,95,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :-

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. குடிநீர் நிதியில் மேற்கொள்ளலாம்.

**நகர் மன்ற தீர்மானம் எண் :- 259** நாள் 28.02.2018

**அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண் 12

இந்நகராட்சிக்குட்பட்ட அலுவலக பின்புறமுள்ள தரைமட்ட நீர்தேக்க தொட்டியிலிருந்து மேல்நிலை நீர்தேக்க தொட்டிக்கு 12.5 Centrifical Motor மூலம் நீர் ஏற்றப்படுகிறது. இதில்இரண்டு எண்ணிக்கை கொண்ட 12.5 Centrifical Motor-ல் 1 எண்ணிக்கை மோட்டார் மூலம் விநியோகம் செய்யப்படும் பொழுது 1 மோட்டார் Standby யாக உள்ளது. மேலும் தினசரி சுமார் 10 மணி நேரம் இயக்குவதால் மோட்டாரில் சில பாகங்கள் அடிக்கடி பழுதாகிவிடுகிறது. அதனால் தரைமட்ட நீர் தேக்க தொட்டியினுள் 12.5 Centrifical Motor 1 எண்ணம் புதிாக அமைத்து இயக்குவதற்கு GI Pipe, வயர் மற்றும் தேவையான உதிரிபாகங்கள் அமைத்திட ஆகும் மதிப்பிடு ரூ. 1,10,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :-

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. குடிநீர் நிதியில் மேற்கொள்ளலாம்.

**நகர் மன்ற தீர்மானம் எண் :- 260** நாள் 28.02.2018

**அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண் 13

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் நீர்த்த சுண்ணாம்பு 5000 கிலோவும், பிளிச்சிங் பவுடர் 500 கிலோவும் வாங்குவதற்கு ஒப்பந்தபுள்ளி 28.02.2018 அன்று கோரியதில் கீழ்கண்ட நிறுவனங்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | கிருமிநாசினி அளவு | விலை விபரம் (ரூ) |
|---|---|---|---|
| 1 | பகவதி ஏஜென்சீஸ், மன்னார்குடி | சுண்ணாம்பு –1 கி.கி. | 8.90 |
| | | பிளிச்சிங் பவுடர் –1 கி.கி. | 46.90 |
| 2 | காவியா எண்டர்பிரைசஸ் மன்னார்குடி | சுண்ணாம்பு –1 கி.கி. | 10.00 |
| | | பிளிச்சிங் பவுடர் –1 கி.கி. | 48.00 |

மேற்கண்டவாறு இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண் 1ல் உள்ள பகவதி ஏஜென்சீஸ் மன்னார்குடி நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளி குறைவாக உள்ளது மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :-

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண் 1ல் உள்ள பகவதி ஏஜென்சீஸ் மன்னார்குடி நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளி குறைவாக உள்ளதால் மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.310/2017/எச்1)

**நகர் மன்ற தீர்மானம் எண் :- 261** நாள் 28.02.2018

**அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண் 14

இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்காக 24 பணியாளர்கள் தனியாரிடமிருந்து பெறப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. உரிமக் காலம் எதிர்வரும் 31.3.2018 மட்டுமே உள்ளதால் தொடர்ந்து 01.04.2018 முதல் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்காக தனியாரிடமிருந்து பணியாளர்கள் பெறப்பட வேண்டியுள்ளது. கடந்த 10 வருடங்களாக 24 தனியார் துப்புரவு பணியாளர்களை கொண்டே துப்புரவு பணி பார்க்கப்பட்டு வருகிறது. மேலும் கடந்த 10 வருடங்களில் நகராட்சி துப்புரவு பணியாளர்கள் 13 நபர்கள் ஓய்வு பெற்றும், இறந்தும் உள்ளனர். தற்போது தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் 100% அனைத்து வீடுகளிலும் குப்பைகளை தரம் பிரித்து வாங்கும் பணி, சமுதாய உரக்கிடங்குகள் அமைத்து உரம் தயாரிக்கும் பணி, உரக்கிடங்கில் உரம் தயாரிக்கும் பணி போன்ற முக்கியமான பணிகளை மேற்கொள்ள தற்போது உள்ள துப்புரவு பணியாளர்களை கொண்டு பணி மேற்கொள்ள இயலவில்லை.

நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் 16.08.2017ந் தேதிய உத்திரவு ந.க.எண். 16469/P3/2017ல் 52 துப்புரவு பணியாளர்களை தனியார் மூலம் பணியமர்த்திக் கொள்ள அனுமதி அளிக்கப்பட்டுள்ளதால் அதன் அடிப்படையிலேயே இந்நகராட்சி நிதிநிலையினை கருத்தில் கொண்டு 01.04.2018 முதல் 31.03.2019 வரை 12 மாத காலத்திற்கு திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு 40 துப்புரவு பணியாளர்களை மட்டும் மாவட்ட ஆட்சியர் திருவாரூர் அவர்களின் தினக்கூலி விகிதத்தின்படி ஒப்பந்த அடிப்படையில் 12 மாத காலத்திற்கு மேற்படி பணிகளை செய்யவும், தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்யவும் ஆகும் உத்தேச செலவீனம் ரூ.50,00,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :-

1. மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர் மன்ற தீர்மானம் எண் :- 262** நாள் 28.02.2018

**அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது**

ஒம் / திரு. சோ.புவனேஸ்வரன் (எ) அண்ணாமலை
தனி அலுவலர் / ஆணையர்
கூத்தாநல்லூர் நகராட்சி

/ உண்மை நகல் /

ஆணையர்
கூத்தாநல்லூர் நகராட்சி

## நகர்மன்ற அவசரக் கூட்டப்பொருள்

2018ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 02.02.2018ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 3.00 மணியளவில் கூத்தாநல்லூர் நகராட்சி அலுவலகத்தில் நடைபெறவுள்ள அவசரக் கூட்டத்தில் கீழ்கண்ட பொருள்கள் பரிசீலனைக்கு வைக்கப்படுகிறது.

பொருள் எண் 1

தமிழ்நாடு தொகுதி மறுவரையறை ஆணையர் கடிதம் எண் 01/2017 நாள் 12.09.2017ல் கண்டுள்ள வழிமுறைகளின்படியும், மாவட்ட மறுவரையறை அலுவலர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் உத்தரவின்படியும் கூத்தாநல்லூர் நகராட்சியில் 24 வார்டுகளுக்கும் 2011 ஆம் ஆண்டின் சொத்துவரி கேட்பு பதிவேட்டின் அடிப்படையிலும், வார்டு மறுவரையறை செய்யப்பட்டு நகர் மன்ற தீர்மான எண் 224 நாள் 15.12.2017ன்படி மன்றத்தின் ஒப்புதல் பெற்றும் தமிழ்நாடு மறுவரையறை ஆணையர் சென்னை அவர்களின் ஒப்புதல்படியும் வரைவு மறுவரையறை கருத்துரு 28.12.2017 அன்று வெளியிடப்பட்டு பெறப்பட்ட ஆட்சேபணைகளின் மீது 29.01.2018ஆம் தேதிய மாநில மறுவரையறை ஆணையர் சென்னை அவர்களின் கருத்துக் கேட்பு கூட்டத்தில் அறிவுறுத்தியபடி சரி செய்யப்பட்ட இறுதி வரைவு வார்டு வரையறை கருத்துரு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண். 1008/2017/இ1)

நகர் மன்ற தீர்மானம் எண் :- 247 நாள் 02.02.2018

அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது

பொருள் எண் 2

இந்நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனங்களை அரசாணை (நிலை) எண் 181 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (நகராட்சி நிர்வாகம் 4) துறை நாள் 19.09.2008–ன்படி கீழ்கண்டுள்ள ஏல பட்டியல் 1ல் உள்ள இனங்களுக்கு 01.04.2018 முதல் 31.03.2021 வரை காலத்தொகுப்பாக 3 ஆண்டுகளுக்கு ஏலம் விடுவதற்கும், மற்றும் ஏல இன பட்டியல் 2, 3 ல் உள்ள இனங்களுக்கு 01.07.2018 முதல் 30.06.2021 வரை ஏலம் விடுவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**ஏல இனங்கள் பட்டியல் – I**

**01.04.2018 முதல் 31.03.2021 முடிய உள்ள காலத்திற்கு அனுபவித்துக் கொள்ளும் உரிமம்**

| | |
|---|---|
| 1 | நகராட்சி சென்ட்ரல் மார்க்கெட் மீன் அங்காடியில் பிரதி தினம் வசூல் செய்யும் உரிமம் (காலத்தொகுப்பாக மூன்று ஆண்டுகளுக்கு) |
| 2 | நகராட்சி சென்ட்ரல் மார்க்கெட் ளாகத்தில் உள்ள ஆடு அடிக்கும் தொட்டியில் பிரதி தினம் வசூல் செய்யும் உரிமம் (காலத்தொகுப்பாக மூன்று ஆண்டுகளுக்கு) |
| 3 | நகராட்சி சென்ட்ரல் மார்க்கெட் வளாகத்தில் உள்ள இறைச்சி அங்காடியில் பிரதி தினம் வசூல் செய்யும் உரிமம் (காலத்தொகுப்பாக மூன்று ஆண்டுகளுக்கு) |
| 4 | நகராட்சி ரம்ஜான் மார்க்கெட் வளாகத்தில் உள்ள மாடு அடிக்கும் தொட்டியில உள்ள கடை எண் 1 முதல் 5 வரை உரிமம் அனுபவிக்கும் (காலத்தொகுப்பாக மூன்று ஆண்டுகளுக்கு) |
| 5 | ரம்ஜான் மார்க்கெட்டில் மாட்டு இறைச்சி அங்காடியில் பிரதி தினம் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் (காலத்தொகுப்பாக மூன்று ஆண்டுகளுக்கு) |

**ஏல இனங்கள் பட்டியல் – II**

**கீழ்கண்டவைகள் 01.07.2018 முதல் 30.06.2021 முடிய உள்ள காலத்திற்கு அனுபவித்துக் கொள்ளும் உரிமம்**

| | |
|---|---|
| இனம் –1 | மேல்கொண்டாழி மாரியம்மன் கோவில் குளம் |
| இனம் –2 | மேல்கொண்டாழி பிள்ளையார் கோவில் குளம் |
| இனம் –3 | தோட்டச்சேரி குளம் |
| இனம் –4 | தோட்டச்சேரி விதை விதைக்கும் குளம் |
| இனம் –5 | பணங்காட்டாங்குடி குளம் |
| இனம் –6 | லெட்சுமாங்குடி கம்பர் தெரு குளம் |

| | |
|---|---|
| இனம் –7 | லெட்சுமாங்குடி பருப்பன் குளம் |
| இனம் –8 | புளியங்குடி பெத்தான் குளம் |
| இனம் –9 | குனுக்கடி குளம் |
| இனம் –10 | பண்டுதக்குடி ஆய் குளம் |
| இனம் –11 | லெட்சுமாங்குடி தோட்டத்து குளம் |
| இனம் –12 | லெட்சுமாங்குடி மேலத்தெரு குளம் |
| இனம் –13 | நாகங்குடி காதர் பாட்சா தெரு குளம் |
| இனம் –14 | பண்டுதக்குடி வலத்தெரு குட்டை |

ஏல இனங்கள் பட்டியல் – III

**01.07,2018 முதல் 30.06.2021 முடிய உள்ள காலத்திற்கு அனுபவித்துக் கொள்ளும் உரிமம் மரப்பாசி குத்தகை 3 ஆண்டுக்கு**

| | |
|---|---|
| 1 | கும்பகோணம் – கொரடாச்சேரி மாவூர் ரோடு கி.மீ 30.0.36.08 புளி –3, பனை.7, மாமரம் – 1 |
| 2 | மன்னார்குடி – திரவாரூர் சாலை கி.மீ. 90/1 14.0 தென்னை மரங்கள் – 18, ஈச்சை –5 நாவல்–1, பனை – 44 |
| 3 | 41 லெட்சுமாங்குடி வட்டத்தில் ஊசி மரங்கள் பனை – 24, (4.20) ஈச்சை –35 (24–1) |
| 4 | 43 இராமநாதன் கோவில் வட்டம் ஊசி மரங்கள் பனை 66, புளி–2, தென்னை–14 |
| 5 | 56 பண்டுதக்குடி வட்டத்தில் உள்ள ஊசி மரங்கள் தென்னை 15 புளி –2 |
| 6 | கோரையாறு இடது கரையில் உள்ள மைல் 7/ஏ, 72/0 குடிதாங்கிச்சேரி கோரையாறு பாலத்தில் இடது கரையில் தென்னை மரங்கள் – 14 ஈச்சை |
| 7 | மரக்கடை தேர் வடக்கு தெருவில் உள்ள தென்னை மரங்கள் 0 காய்ப்பில் உள்ளது. |
| 8 | லெட்சமாங்குடி கம்பர் தெருவில் உள்ள தென்னை மரங்கள் 1 காய்ப்பில் உள்ளது. |
| 9 | நகராட்சி அலுவலிகத்தை சுற்றியுள்ள தென்னை மரங்கள் 39 |
| 10 | மரக்கடை தெற்கு தெருவில் உள்ள தென்னை மரங்கள் காய்ப்பில் உள்ளது – 3க ாய்ப்பில் இல்லாதது–1 |
| 11 | மேல்கொண்டாழி வடக்கு பகுதியில் உள்ள தென்னை மரங்கள் காய்ப்பில் உள்ளது 16 |
| 12 | மேல்கொண்டாழி தெற்கு பகுதியில் உள்ள தென்னை மரங்கள் காய்ப்பில் உள்ளது. |

மேலும் 01.04.2018 முதல் 31.03.2021 வரை மூன்று ஆண்டகளுக்கு காலத்தொகுப்பாக அனுமதித்து கொள்ள பொது ஏலம் நடத்திடவும் ஒப்பந்தபுள்ளி கோரவும் அறிக்கை தயார் செய்யவும், தினசரி நாளிதழில் விளம்பரம் செய்திடவும் ஆகும் உத்தேச செலவின தொகை ரூ.50,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-
அனுமதிக்கலாம்.

(ந.க.எண் 161 /2018/அ2)

**நகர் மன்ற தீர்மானம் எண் :- 248** **நாள் 02.02.2018**

**அலுவலக குறிப்பு :- அனுமதிக்கப்பட்டது**

ஒம் / திரு. சோ.புவனேஸ்வரன் (எ) அண்ணாமலை
தனி அலுவலர் / ஆணையர்
கூத்தாநல்லூர் நகராட்சி

/ உண்மை நகல் /

ஆணையர்
கூத்தாநல்லூர் நகராட்சி